பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 05 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. பருத்திக்கான இறக்குமதி வரியை அடுத்த ஐந்து மாதங்களுக்கு மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

3. கர்நாடக முதலமைச்சராக திரு **D K** சிவகுமார் வரும் 3-ஆம் தேதி பதவியேற்க உள்ளார்.

4. தென்மேற்கு பருவமழை கேரளம் மற்றும் தமிழகத்தில் வரும் நான்கு நாட்களில் தொடங்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Bristol**-ல் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து முதலில் பேட் செய்கிறது.

. . இனி விரிவான செய்திகள் . .

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட கோவா போன்ற மாநிலங்களின் வளர்ச்சி முக்கியமானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கோவாவின் பனாஜியில் 40-ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், வளர்ச்சியையும், கலாச்சாரத்தையும் சமமாக கொண்டு கோவா மாநிலம் செயல்படுவதாக தெரிவித்தார்.

சிறந்த சுற்றுலாத் தளமாக விளங்கும் கோவா மாநிலம், கலாச்சார பாரம்பரியத்திலும், சமூக நல்லிணக்கத்திலும், இலக்கியத்திலும் சிறப்பாக விளங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி, சுகாதாரம், டிஜிட்டல் நிர்வாகம் உள்ளிட்டவைகளின் கட்டமைப்புகளை மேம்படுத்தியதற்கு முதலமைச்சர் டாக்டர் பிரமோத் சாவந்த்தை அவர் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தீன் தயாள் சுகாதார திட்டத்தை திரு சி பி ராதாகிருஷ்ணன் தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

பருத்திக்கான இறக்குமதி வரியை அடுத்த ஐந்து மாதங்களுக்கு மத்திய அரசு ரத்து செய்துள்ளது.

ஜவுளித்துறை அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வரும் ஜூன் ஒன்றாம் தேதிமுதல், அக்டோபர் மாதம் 31-ஆம் தேதிவரை இது நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜவுளித்துறைக்கு தேவையான பருத்தி குறைந்த விலையில், தடையின்றி கிடைக்க ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜவுளி நிறுவனங்கள் உலகளாவிய போட்டியை எதிர்கொள்வதற்கும் இந்த நடவடிக்கை உதவிகரமாக இருக்கும் என்றும் மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் விவசாய பண்ணை பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்கம் நாளை முதல் ஒருமாத காலம் நடைபெறவுள்ளது.

இந்த இயக்கத்திற்கான ஆயத்தப்பணிகள் குறித்து மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தலைமையில், புதுதில்லியில் இன்று உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பேசிய அமைச்சர், **Khet** பச்சாவோ அபியான் என்ற இந்த இயக்கம், பஞ்சாயத்து முதல் அனைத்துப்பகுதிகளையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார்.

குறைந்த அளவில் சரியான உரங்களை பயன்படுத்தி, அறிவியல் பூர்வமான ஆலோசனைகளுடன் வேளாண் பணிகளை சிறப்பாக மேற்கொள்வது குறித்து இந்த திட்டத்தின்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வானிலை, மண்ணின் தரம், விளைப்பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் ஆகியவை குறித்து இந்த விழிப்புணர்வு முகாம்களில்

விவசாயிகளுக்கு நேரடி ஆலோசனைகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்திய வேளாண் ஆராய்சி கவுன்சில், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் உள்ளிட்ட அமைப்புகள் மூலம் அறிவியல் பூர்வமான ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற — சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இந்த இயக்கத்தில் பங்கேற்று தேசிய அளவில் இதனை வெற்றிபெற செய்ய ஒத்துழைப்புத் தருமாறும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட **Samadhan Didi** பொதுமக்கள் குறைதீர் கட்டமைப்பை இன்று மத்திய பணியாளர் மற்றும் ஓய்வூதியத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், பொதுமக்கள் குறைகளை தங்கள் குரலிலேயே பதிவு செய்து விரைந்து நிவாரணம் பெறுவதற்கு இந்த கட்டமைப்பு உதவிடும் என்று தெரிவித்தார்.

**22** இந்திய மொழிகளில் குறைகளை தெரிவித்து விரைந்து தகவல் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங், கூறினார்.

<<<<<<<>>>>>>

நாட்டில் அரசியல் சாசனம் மற்றும் சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு தேர்தல்கள் நடத்தப்படுவதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், தேர்தல் ஆணையத்தின் வெளிப்படையான சட்டங்களுக்கு உட்பட்டு தேர்தல்களை நேர்மையாக நடத்துவதாக கூறினார்.

மக்களவைத் தேர்தலின்போது ஒரு கோடியே **80** லட்சம் பேர் தேர்தல் பணியில் ஈடுபட்டதாகவும் திரு **Gyanesh Kumar** தெரிவித்தார்.

தேர்தலை நேர்மையாக நடத்துவதற்கான நெறிமுறைகள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

கர்நாடக முதலமைச்சராக திரு டி கே சிவகுமார் வரும் **3**-ஆம் தேதி பதவியேற்க உள்ளார்.

பெங்களூருவில் இன்று நடைபெற்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவராக அவர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர், ஆளுநர் திரு தாவர் சந்த் கெலாட்டை சந்தித்து தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தை வழங்கி ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்திய குடிமைப்பணி தேர்வு முடிவுகள் குறித்த தவறான விளம்பரம் வெளியிட்ட தனியார் பயிற்சி மையம் மீது ஏழு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2023-ஆம் ஆண்டு வெளியான தேர்வு முடிவுகள் தொடர்பான விளம்பரத்திற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறியுள்ளார்.

பயிற்சி மையங்கள் வெளிப்படைத் தன்மையாகவும், பொறுப்புடனும், நேர்மையாகவும் செயல்படுவதை உறுதிபடுத்த

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் பல்வேறு பயிற்சி மையங்களுக்கு ஒரு கோடியே **46** லட்சம் ரூபாய் மதிப்பிலான அபராதம் தொடர்பாக நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மாணவர்களின் நலனை பாதுகாக்க நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

கேரளத்தின் பல்வேறு இடங்களில் மத்திய வருவாய் புலனாய்வுத்துறை நடத்திய சோதனையில் **24** கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருவனந்தபுரம், கொச்சி, மலப்புரம் உள்ளிட்ட நகரங்களில் இந்த சோதனை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

ஈரானுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்திற்குபின் செய்தியாளர்களிடம் பேசிய திரு ட்ரம்ப், **Hormuz** நீரிணையை ஈரான் திறந்துவிட்ட பின்புதான் அந்நாட்டுடன் சண்டை நிறுத்தம் குறித்த ஒப்பந்தம் நிறைவுபெறும் என்றும் கூறினார்.

அணு ஆயுதத்தை அந்நாடு முற்றிலுமாக கைவிட வேண்டும் என்றும், அங்குள்ள யுரேனியத்தை முற்றிலுமாக அகற்றுவதற்கு அமெரிக்காவை அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும், ஈரான் அணுசக்தியை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்வதில் எவ்வித தடையும் இல்லை என்றும் திரு டோனல்டு ட்ரம்ப் கூறினார்.

<<<<<<<>>>>>>

மியான்மர் அதிபர் **U Min Aung** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.

இன்று காலை பீகார் மாநிலம் கயாவில் உள்ள மகாபோதி கோவிலில் அவர் வழிபட்டார்.

மியான்மர் அதிபர், நாளை மறுநாள் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேச உள்ளார்.

இருதரப்பு உறவுகள், கலாச்சார தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் அவர் பேச்சு நடத்த உள்ளார்.

இந்தியாவில் உள்ள தொழில் அதிபர்களையும் சந்தித்து அவர் பேச்சு நடத்த உள்ளார்.

வரும் செவ்வாய்க்கிழமை திரு **U Min Aung** மும்பை செல்ல திட்டமிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தென்மேற்கு பருவமழை கேரளம் மற்றும் தமிழகத்தில் வரும் நான்கு நாட்களில் தொடங்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடா பகுதியிலும், லட்சத்தீவுகள் மற்றும் கன்னியாகுமரி பகுதியிலும் பருவமழை நெருங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் எட்டு மாவட்டங்களில் கனமழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளம் மற்றும் லட்சத்தீவு கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் வரும் 3-ஆம் தேதிவரை கடலுக்கு செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி **Bristol**-ல் தற்போது நடைபெற்று வருகிறது.

டாஸ் வென்று முதலில் பேட் செய்துவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 4 புள்ளி இரண்டு ஓவரில், ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ரன் எடுத்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

----------------

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **21-19, 21-18** என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Won Ho Kim — Seung Jae Seo** இணையை வென்றது.

**<<<<<<<<END>>>>>>>**